1972 ஆகஸ்ட் 19]

		ரூ.
4.	திரு. மகாலிங்கம்	1,000.00
5.	டாக்டர் சுந்தரவதனம்	1,000.00
6.	திருவாளர்கள் தாராபூர்	1,000.00
7.	திரு. ரத்தினம் (டி.வி.எஸ்)	1,001.00
8.	திரு. சுந்தர்லால் நகாதா (கிழக்கிந்திய பட நிறுவனம்)	2,500.00
	மொத்தம்	14,502.00

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, சென்னை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற இந்த கண்காட்சியைப் போல தமிழகத்திலுள்ள ஏனைய மருத்துவக் கல்லூரிகளிலும் இத்தகைய கண்காட்சியை நடத்தி மக்கள் பயன்பெற ஏற்பாடு செய்ய அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அண்மையில் தஞ்சையில் ஒரு மருத்துவக் கண்காட்சியை நான் தொடங்கி வைத்திருக்கிறேன். அதே போல செங்கற்பட்டில் ஆளுநர் அவர்கள் திறந்து வைத்திருக்கிறார்கள். மற்ற கல்லூரிகளில் மாணவர்கள், ஆசிரியர்கள் ஒத்துழைக்கின்ற ஆர்வத்தைப் பொறுத்து, திறத்தைப் பொறுத்து அவைகளை நடத்த முடியும்.

Cases of chicken-pox in Madras City.

* 188 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there was any outbreak of chicken-pox in Madras City around the end of March 1972 ; and

(b) if so, the preventive steps taken in this regard ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) சின்னம்மையால் பாதிக்கப்பட்டவர்களென (chicken-pox) உடல் நல அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டவர்கள் தண்டையார்பேட்டையிலுள்ள தொற்றுநோய்கள் மருத்துவமனையில் நோய் தொற்றும் தன்மை முடிகிற வரையில் தனித்து வைக்கப்பட்டனர். தங்கள் வீடுகளிலேயே தனித்து வைக்க இடம்

இருப்பவர்களைக் குறித்த வரையில்; அவர்கள் தனிப்பட்ட மருத்துவர்களால் சிகிச்சையளிக்கப்பட அனுமதியளிக்கப்பட்டனர். மக்களில் விருப்பமுள்ளோர் பெரியம்மை வராமல் இருக்க அம்மைப்பால் குத்தப்பட்டனர். அம்மாதிரி அம்மை குத்துதல் அவர்களை பெரியம்மையிலிருந்து தான் பாதுகாக்குமே தவிர சின்னம்மையிலிருந்து பாதுகாக்காது என்றும் அவர்களுக்குச் சொல்லப்பட்டது. சின்னம்மை நோய் ஏற்பட்டுள்ளதைப்பற்றிய நாளிதழ் அறிக்கையொன்று சென்னை மாநகரின் உடல்நல அலுவலரால் வெளியிடப்பட்டுள்ளது.

THIRU N. DENNIS : Sir, may I know from the Hon Minister whether it was in an epidemic form and whether there were casualties and if so, may I know the details?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, 72-ம் ஆண்டு ஜனவரியில் 915 பேருக்கு சிக்கன்பாக்ஸ் ஏற்பட்டது. ஒருவர் இறந்திருக்கிறார். பிப்ரவரியில் 1565 பேருக்கு ஏற்பட்டது. ஒருவரும் இறக்கவில்லை. மார்ச்சில் 1940 பேருக்கு ஏற்பட்டது. 3 பேர் இறந்திருக்கிறார்கள். ஏப்ரலில் 887 பேருக்கு ஏற்பட்டது, 3 பேர் இறந்திருக்கிறார்கள். இவர்கள் பெரும்பாலும் சிக்கன்பாக்ஸ் காரணமாக இறந்ததாகச் சொல்வது கடினம். வேறு சிக்கல்கள் இருந்திருக்கக்கூடும். அவைகளால் இறந்திருப்பார்கள். இது ஸ்மால்பாக்ஸ் போல கொடுமையானதல்ல என்று தெரிகிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, இந்த சின்னம்மை ஏற்படுவதற்குக் காரணம் வைரஸ் என்று சொல்கிறார்கள். வைரஸ் காரணத்தினால் மருந்துகள் கண்டு பிடிக்க முடிவில்லையென்று கருதுகிறார்கள். இது உண்மைதானாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இன்னும் நான் அவ்வளவு புரிந்து கொள்ளவில்லை.

திருமதி த ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, சின்னம்மையால் வட சென்னை அதிகமாக பாதிக்கப்பட்டிருந்ததா அல்லது தென் சென்னை அதிகமாக பாதிக்கப்பட்டிருந்ததா? அப்படி வட சென்னையில் அதிகமாக இருந்திருக்குமானால் அதற்கு அங்கேயுள்ள

1972 ஆகஸ்ட் 19]

மக்கள் நெருக்கடி காரணமா என்பதை அறிய ஆராய்ச்சியை சென்னை நகரத்தில் அரசு நடத்தியதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

குடும்பநலத் திட்டம்.

* 189 **வினா—திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குடும்பநலத் திட்டத்தின் கீழ் பெண்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய தனிப்பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தக் குடும்ப நல திட்டத்தின் கீழ் பெண்களுக்கு அறுவை சிகிச்சை செய்வதற்கு பயன்படுத்தப்படுகிற டாக்டர்கள் பெரும்பாலும் ஆண்களாகவே இருக்கிற காரணத்தினால் சில பல நேரங்களில் சங்கடங்கள் உருவாவதாகச் சொல்லப்படுகிறது. ஆக, பெண்களுக்கு அறுவை சிகிச்சை செய்கிற நேரத்தில் பெண் டாக்டர்களையே பயன்படுத்துவதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இது தவறான கருத்து. ஏனென்றால் இந்த திட்டத்தில் பெண்களுக்கு போஸ்ட் டெலிவரி ஆபரேஷன் என்ற நிலையில் பெண் டாக்டர்களால் மட்டும் தான் நடத்தப்படுகிறது. இது பிரசவத்தையொட்டி நடத்தப்படுவதால் கைனகாலஜி, ஆப்ஸ்டடெரிக்ஸ் போன்ற துறைகளில் தகுதி பெற்று சிறப்பு பட்டம் பெற்ற பெண்கள் மட்டும் தான் இந்தத் துறை டாக்டர்களாக நியமிக்கப் படுகிறார்கள். ஏராளமான பெண்கள், தகுதியுள்ளவர்கள், தகுந்த மேற்பார்வையில் இந்த அறுவை சிகிச்சையை நடத்துகிறார்கள். உடன் இருந்து செய்கிறவர்கள், மற்றும் பெரும்பாலோர் பெண்களாகவே தான் இருப்பார்கள்.